**நகர குடியிருப்பு அபிவிருத்தி அதிகாரசபை - 2021**

---

## 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

நகர குடியிருப்பு அபிவிருத்தி அதிகாரசபையின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி செயலாற்றல் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்புக்கள், முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொழிப்புக்கள் உள்ளடங்கிய 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டம் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டம் என்பவற்றின் ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து அதிகாரசபையின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களை அடிப்படையாகக் கொண்டு எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந் நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, அதிகாரசபை தொடர்ந்தியங்கும் அதன் ஆற்றலினை தீர்மானிப்பது முகாமைத்துவத்தின் பொறுப்பாவதுடன், முகாமைத்துவமானது அதிகாரசபையை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் அடிப்படையில் கணக்கீடு செய்தல் மற்றும் அதிகார சபை தொடர்ந்தியங்குவதுடன் தொடர்புடைய விடயங்களை வெளிப்படுத்துதல் முகாமைத்துவத்தின் பொறுப்பாக உள்ளது.

அதிகாரசபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம், அதிகாரசபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதிகாரசபை அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை முறையாக பேணுதல் வேண்டும்.

**1.4 கணக்காய்வின் நோக்கெல்லை (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்)**

பொதுவாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்தும் நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும், இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன், அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்,

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி அதிகாரசபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவம் பின்பற்றிய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாட்டையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவம் மேற்கொண்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய

தொடர்ந்து செயற்படுவதற்கு கூட்டுத்தாபனத்திற்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் அதிகாரசபையின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

தேவையானவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- அதிகாரசபையின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- அதிகாரசபையின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் அதிகாரசபை இணங்கியிருந்ததா என்பதும்,

- அதிகாரசபை அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும்,

- அதிகாரசபையின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 நிதிக்கூற்றுக்கள்

### 1.5.1 நிதிக்கூற்றுக்களின் தயாரிப்பு மீதான உள்ளகக் கட்டுப்பாடு

முகாமைத்துவத்தின் பொதுவான அல்லது குறித்துரைக்கப்பட்ட அங்கீகாரத்துடன் கொடுக்கல் வாங்கல்கள் மேற்கொள்ளப்படுகின்றன என்றும், பொருத்தமான அறிக்கையிடல் நியமங்களிற்கிணங்க நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்படுவதை அனுமதிப்பதற்கும் சொத்துக்களிற்கான கணக்களிப்பொறுப்பை பேணுவதற்கும் தேவையானவாறு கொடுக்கல் வாங்கல்கள் பதிவு செய்யப்படுகின்றன என்றும் முகாமைத்துவத்தின் பொதுவான அல்லது குறித்துரைக்கப்பட்ட அதிகாரத்தின் பிரகாரம் மாத்திரமே சொத்துக்களை அணுகுவதற்கு அனுமதிக்கப்படுகின்றது என்றும் பதிவு செய்யப்பட்ட சொத்துக்களிற்கான கணக்களிப்பொறுப்பு ஏற்கனவேயுள்ள சொத்துக்களுடன் நியாயமான கால இடைவெளிகளில்

ஒப்பீடு செய்யப்படுகின்றன என்றும் ஏதாவது வேறுபாடுகள் தொடர்பாக பொருத்தமான நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என்றும் நியாயமான உறுதிப்பாட்டை வழங்குவதற்கு போதுமான உள்ளகக் கணக்கீட்டுக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை ‘‘திட்டமிட்டு பேணுதல்’’ நிறுவனங்களிற்கு அவசியமாக உள்ளது.

**1.5.2 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 02 இல் குறிப்பிடப்படும் ஏற்பாடுகளுக்கு மாற்றமாக 6 மாதங்களில் மற்றும் 12 மாதங்களில் முதிர்சியடையும் ரூபா 524,500,000 ஆன நிலையான வைப்புகளின் பெறுமானங்களையும் பணம் மற்றும் பணத்திற்கு சமமானவற்றின் பெறுமானமாக தொடர்புபடுத்திய காரணத்தால் மீளாய்வாண்டு இறுதியிலான காசு பாய்ச்சல் கூற்றில் பணம் மற்றும் பணத்திற்கு சமமானவற்றின் மீதி அப்பெறுமானத்தால் மிகையாக கணக்கிடப்பட்டிருந்தது. அவ்வாறே, அதிகாரசபையினால் மீளாய்வாண்டினுள் நிலையான வைப்புக்களில் முதலீடு செய்யப்பட்ட ரூபா 916,500,000 ஆன காசு பாய்ச்சல் கூற்றில் முதலீட்டு செயற்பாடுகளின் கீழ் உள்ளடக்கி இருக்காத காரணத்தால் முதலீட்டு செயற்பாடுகளின் கீழ் உருவாகும் தேறிய காசு பாய்ச்சல் அப் பெறுமானத்தால் குறை கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | 6 மாதங்களில் மற்றும் 12 மாதங்களில் முதிர்சியடையும் வைப்புக்கள், முதலீட்டு செயற்பாட்டினால் ஏற்படும் காசு பாய்ச்சலின் கீழ் காட்ட இன்று முதல் நடவடிக்கை எடுக்கப்படும். கணக்காய்வினால் சுட்டிக் காட்டியவாறு நிலையான வைப்புக்களில் முதலீடு செய்தல் மற்றும் வைப்புக்களை மீள் பெறல் தேறிய அடிப்படையில் அறிக்கையிட நடவடிக்கை எடுக்கப்படும். முதலீடு செய்யப்படும் பணம் மற்றும் நிலையான வைப்புக்களின் சாசு பாய்ச்சல் கூற்றுக்கள் உடனடியாக முதலீட்டு செயற்பாடுகளின் கீழ் உள்ளடக்க குறித்த பிரிவிற்கு ஆலோசனை வழங்கப்பட்டது. | பணம் மற்றும் பணத்திற்கு சமமானவற்றின் கீழ் 03 மாதங்கள் அல்லது அதற்கு குறைந்த காலமொன்றான குறுகிய முதிர்சியடையும் காலம் காணப்படும் முதலீடுகளை மாத்தரம் காட்ட வேண்டும். நிலையான வைப்புக்களில் மேற்கொள்ளும் முதலீடுகளை காசு பாய்ச்சல் கூற்றில் முதலீட்டு செயற்பாடுகளின் கீழ் காட்ட வேண்டும். |

**1.5.3 கணக்கீட்டு கொள்கைகள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | நிதிக்கூற்றுக்களில் கணக்கீட்டு கொள்கை இலக்கம் 8.4 பிரகாரம் கிரயம் ரூபா 4.9 மில்லியனான அநுராதபுர துரு இதுருகம 6 வீடுகளை சுற்றுலா வங்களா வீடுகளாக நடாத்திச் செலவதாக காட்டியிருந்த போதும் இலங்கை கணக்கீட்டு நியமம் 7 ‘‘ஆதனம் பொறிகள் மற்றும் உபகரணங்கள்’’ இன் 7 ஆம் இலக்க பிரிவின் | கணக்காய்வினால் சுட்டிக் காட்டியவாறு அநுராதபுர வீடமைப்பு கருத்திட்டத்தின் எஞ்சியுள்ள சுற்றுலா வங்களா வீடுகளாக நடாத்திச் செல்ல உத்தேசிக்கப்பட்ட 06 வீடுகள் மற்றும் சிங்ஹபுர குத்தகை அடிப்படையில் வழங்கியுள்ள 15 வீடுகளை | கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | பிரகாரம் அவ்வீடுகளை முதலீட்டு சொத்தாக இனங்காணாது நிதிக்கூற்றுக்களில் ஆதன பொறிகள் மற்றும் உபகரணங்களின் கீழ் காட்டப்பட்டிருந்தன. அவ்வாறே கிரயம் ரூபா 36.62 மில்லியனான அதிகாரசபையினால் குத்தகை அடிப்படையில் வழங்கியுள்ள சிங்ஹபுர 15 வீடுகளை முதலீட்டு சொத்துக்களாக இனங்காணாது நடைமுறை சொத்துக்களின் கீழ் காட்டப்பட்டிருந்தது. | முதலீட்டு சொத்துக்களாக வேறாக கணக்குகளில் முன்வைக்க நடவடிக்கை எடுக்கப்படும். | |
| (ஆ) | மீளாய்வாண்டிற்கு முன்னர் நிலவிய ரூபா 716.11 மில்லியனான அரச மானியங்களை கணக்கீடு செய்வது தொடர்பாக பின்பற்றப்படும் கணக்கீட்டு கொள்கையை நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தி இருக்கவில்லை. | அரச மானியங்களின் மூலம் 2020 ஆண்டின் பின்னர் மேற்கொள்ளப்பட்ட கருத்திட்டங்களை வெளிக்காட்ட கொள்கை ரீரியான தீர்மானங்களை எடுத்து கணக்கீடு செய்ய உரிய கணக்கீட்டு கொள்கைகளை சரியாக இனங்கண்டு 2021 ஆண்டு கணக்குகளில் வெளிப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | அரச மானியங்களை கணக்கீடு செய்யும் போது கணக்கீட்டு கொள்கைகளை நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்த வேண்டும். |

### 1.5.4 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டு இறுதியில் நிலவிய பெறவேண்டிய ரூபா 206.77 மில்லியனான மொத்த கடனை அறவிடும் இயலுமையை மீளாய்வு செய்து அதன் மொத்த இழப்பீட்டு பெறுமானத்தை இனங்காண நடவடிக்கை எடுக்காது அம் மீதிக்கு 5 தசவீத ஐயக்கடன் ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது. | தற்போது அதிகார சபையின் கடன் பிரிவினால் அனைத்து கடன்களையும், முறையான, முறையற்ற மற்றும் காலம் கடந்த கடன் என வகைப்படுத்தப்பட்டுள்ளது. அதன் பிரகாரம், தற்போது காலம் கடந்த கடனின் கீழான 12 தவணைகள் அல்லது அதற்கு கூடிய நிலுவை கடன் மீதிகளின் அடிப்படையில் பின்வரும் விகிதத்தின் கீழ் கணக்குகளில் ஐயக்கடன் ஒதுக்க நடவடிக்கை எடுக்கிறேன். | கடன்படுனர் மீதி பகுப்பாய்வின் பிரகாரம் ஐயக்கடன் ஒதுக்கீடு மேற்கொள்ள வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டு இறுதியில் அதிகார சபையின் நிதிக்கூற்றுக்களின் தேறிய சொத்துக்களில் உள்ளடங்கிய ரூபா | கிடைத்துள்ள மோடார் வண்டியின் பெறுமதியை அரச மானியமொன்றாக | சொத்துக்களை சரியாக வகைப்படுத்தி நிதிக்கூற்றுக்களில் |

| | | | |
|---|---|---|---|
| | 6.64 மில்லியனான திரண்ட நிதியத்தினுள் 2017 ஆண்டில் வரிசை அமைச்சிடமிருந்து கிடைத்த ரூபா 2.35 மில்லியனான மோடார் வண்டியொன்றின் பெறுமதியை உள்ளடக்கியிருந்ததுடன் அம் மோடார் வண்டியின் பெறுமதி அரசின் மானியமொன்றாக கணக்கீடு செய்து வருடாந்தம் காலக் கழிவு செய்ய நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | கணக்கீடு செய்துள்ளதுடன், அம்மீதிகளை வருடாந்தம் பதிவழிக்க நடவடிக்கை எடுக்கப்படும். | வெளிப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (இ) | ஓராண்டிற்கு அதிக காலமாக நிலவும் மீதியொன்றான முனாவ வீடமைப்புக் கருத்திட்டத்திற்காக பொது திறைசேரியிடமிருந்து கிடைத்த ரூபா 751.11 மில்லியனை நிதி நிலைமை கூற்றில் திறைசேரி மானியத்தின் கீழ் கணக்கீடு செய்யாது நடைமுறை சொத்தின் கீழ் பிற்போட்ட வருமானமாக கணக்கீடு செய்ததால் நடைமுறை பொறுப்புக்கள் அப்பெறுமானத்தால் அதிரித்து மற்றும் உரிமை மற்றும் ஒதுக்கம் அப்பெறுமானத்தால் குறைத்தும் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தன. | நிதி நிலைமை கூற்றில் திறைசேரி மானியத்தின் கீழ் கணக்கீடு செய்ய நடவடிக்கை எடுக்கிறேன். | திறைசேரி மானியத்தினை உரிய முறையில் கணக்கீடு செய்ய வேண்டும். |
| (ஈ) | மீளாய்வாண்டு இறுதியில் முனாவ வீடமைப்புக் கருத்திட்டத்தில் விற்கப்படாது எஞ்சிய வீடுகள் 181 அலகுகளான போதும், நிதிக்கூற்றுக்களில் வீடுகளின் எண்ணிக்கை 180 அலகுகளாக காட்டப்பட்டதால் நடைமுறை சொத்துக்கள் ரூபா 3.64 மில்லியனினால் குறைவாக கணக்கிடப்பட்டிருந்தன. அவ்வாறே விற்பனை செய்யப்பட்ட 175 வீடுகளிற்குரியதாக இனங்காண வேண்டிய வருமானத்திலிருந்து கிடைத்த மற்றும் மீள் செலுத்த வேண்டிய திறைசேரி ஏற்பாட்டை குறைத்த பின் வித்தியாசமான ரூபா 150.06 மில்லியனை அதிகார சபையின் வருமானமாக இனங்காணாது கிடைத்த ரூபா 766.35 மில்லியனான மொத்த தொகையையும் கணக்கீடு செய்த காரணத்தால மீளாய்வாண்டின் வருமானம் ரூபா 616.29 மில்லியனினால் மிகையாக கணக்கிடப்பட்டிருந்தது. | மீளாய்வாண்டினுள் மொத்த தொகையையும் செலுத்தி கொள்வனவு செய்த வீடொன்று குறித்த வீட்டுச் சொந்தக்காரரினால் மீண்டும் அதிகார சபைக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது. அவ்வீட்டை மீண்டும் இருப்பிற்கு சேர்த்தல் விடுபட்டுள்ளது. அதன் பிரகாரம், கணக்குகளில் ஏற்பட்டுள்ள மிகை கணக்கிடல்/குறை கணக்கிடலை சீராக்க நடவக்கை எடுக்கிறேன். இக் கருத்திட்டத்திற்காக பொது திறைசேரியினால் வழங்கிய ஏற்பாடு, ரூபா 1392.34 மில்லியனாகும். இக் கருத்திட்டத்தை ஆரம்பிக்கும் சந்தர்பத்தில் ஆரம்ப அமைச்சரவை தீர்மானத்திற்கமைய வழங்கும் ஏற்பாட்டை மீண்டும் திறைசேரிக்கு அனுப்ப வேண்டுமென | அமைச்சரவை தீர்மானத்திற்கு இணங்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | |
|---|---|---|
| | குறிப்பிடப்படவில்லை. இரண்டாவதாக 2020 ஆண்டில் திறைசேரி அவதானிப்பின் கீழ் இக் கருத்திட்டத்திற்கு வழங்கிய ஏற்பாட்டை மீண்டும் செலுத்த வேண்டுமென அவதானிப்பொன்றை வழங்கியுள்ளது. இது தொடர்பாக பொது திறைசேரியினால் எதிர்காலத்தில் வழங்கப்படும் ஆலோசனை பிரகாரம் மேலும் தேவையான தீர்மானங்களை அதிகாரி சபையினால் எடுக்க நடவடிக்கை எடுக்கப்படும். | |

### 1.5.5 அதிகார சபையின் தொடர்ந்தியங்கும் தன்மை

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2008 இன் 36 இலக்க நகர குடியிருப்பு அபிவிருத்தி அதிகார சட்டத்தின் 16 (3) உப பிரிவில் குறிப்பிட்டுள்ள ஏற்பாடுகள் பிரகாரம், அதிகார சபையின் ஆரம்ப மூலதனம் ரூபா 5,000 மில்லியனாக இருக்க வேண்டிதுடன் அது பகுதிகளாக அரச திரண்ட நிதியத்திலிருந்து கிடைக்க வேண்டிய போதும் மீளாய்வாண்டு இறுதி வரையும் அதிகார சபைக்கு எவ்வித மூலதனமும் கிடைத்திருக்கவில்லை. | 2008 இன் 36 இலக்க நகர குடியிருப்பு அபிவிருத்தி அதிகார சட்டத்தின் 16 (3) உப பிரிவில் குறிப்பிட்டுள்ள ஏற்பாடுகள் பிரகாரம், அதிகார சபையின் ஆரம்ப மூலதனம் ரூபா 5,000 மில்லியனாக இருக்க வேண்டிய போதும், இது வரை எவ்வித மூலதனமும் வழங்கப்படவில்லை. அதன் பிரகாரம், அதிகார சபையின் தொடர்சியான இயக்கத்திற்காக தற்போது எங்களிடமுள்ள திறைசேரி ஏற்பாட்டின் மீது சேர்க்கப்படும் வருமானத்தை சட்ட ரீதியாக நிறுவியுள்ள நகர குடியிருப்பு அபிவிருத்தி அதிகார சபையின் நிதியத்தினுள் செலவு வைக்கப்பட்டுள்ளதுடன், அத் தொகையை மூழ்கிய நிதியமாக பேணிச் செல்வதுடன், அதன் வங்கி வட்டியை மாத்திரம் நிறுவனத்தின் நோக்கத்தை அடைந்து கொள்ள தற்போது பயன்படுத்தப்படுகின்றது. | அரச மூலதன பங்களிப்பை அதிகார சபைக்கு பெற்றுக் கொள்ள தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | 2008 இன் 36 இலக்க நகர குடியிருப்பு அபிவிருத்தி அதிகார சட்டத்தின் 16 (1) (உ) உப பிரிவில் குறிப்பிடப்படும் ஏற்பாடுகள் பிரகாரம் குறைந்த செலவு வீடமைப்பு நிகழ்சித் திட்டங்களிற்கு நிதி வழங்க சொத்துகள் அபிவிருத்தி செய்பவர்களிடம் சேவைக் கட்டணமாக நகர அபிவிருத்தி அதிகார சபையினால் திரட்டப்படும் அனைத்து பணமும் நகர குடியிருப்பு அபிவிருத்தி அதிகார சபையின் நிதியத்திற்கு செலவு வைக்க வேண்டியதாக இருந்தது. நிதி மற்றும் கொள்கை திட்டமிடல் அமைச்சினால் முன்வைக்கப்பட்ட அமைச்சரவை விஞ்ஞாபனத்திற்கு கிடைத்த, 2010 திசெம்பர் 14 இன் 10/2951/504/012 இலக்க அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் நகர அபிவிருத்தி அதிகார சபையினால் இச் சேவை கட்டண அறவீட்டை நிறுத்தியதால் நகர குடியிருப்பு அபிவிருத்தி அதிகார சபைக்கு அவ்வருமான வழி இல்லாது போயிருந்தது. அத் தீர்மானம் எடுக்கப்பட்ட சந்தர்பத்தின் போது நகர அபிவிருத்தி அதிபார சபையினால் அறவிட்டிருந்த என்னும் நகர அபிவிருத்தி அதிகார சபைக்கு கொடுக்காத ரூபா 207.33 மில்லியனான சேவைக் கட்டணத்தை மீளாய்வாண்டு இறுதியிலும் பெற்றுக் கொள்ள இயலாதிருந்தது. | நகர அபிவிருத்தி அதிகார சபையிடமிருந்து எங்களுக்கு கிடைக்க வேண்டிய ரூபா 207.33 மில்லியனான சேவைக் கட்டண பணத்தை பெற்றுக் கொள்ள அமைச்சின் செயலாளரின் தலைமையில் இரண்டு நிறுவனங்களிற்கிடையில், கலந்துரையாடல் நடாத்தப்பட்டதுடன், அங்கு அமைச்சின் செயலாளரின் தீர்மானமாக அமைந்தது கணக்காய்வளர் அதிபதியின் பரிந்துரையின் மீது அப் பணத்தை நகர அபிவிருத்தி அதிகார சபைக்கு செலுத்த வேண்டுமா இல்லையா என தீர்மானிக்க வேண்டுமெனவும் அச்சந்தர்ப்பத்திற்கு சமுகமளித்த நகர அபிவிருத்தி அதிகார சபையின் தலைவர் மற்றும் பணிப்பாளர் நாயகம் உள்ளிட்ட ஆளணியினர் அத்தீர்மானத்துடன் அவர்களின் இணக்கப்பாட்டையும் வெளிப்படுத்தினர். | சட்டத்தின் பிரகாரம் திரட்டப்படும் வருமானம் இந்த அதிகார சபைக்கு கிடைக்க வேண்டியதுடன் இவ்விரண்டு நிறுவனங்களும் ஒரே அமைச்சின் கீழ் உள்ளதால் அமைச்சின் செயலாளரினால் தேவையான நடவடிக்கை எடுக்க வேண்டும். மேலும், சட்டம் பாராளுமன்றத்தினால் திருத்தப்படாது அமைச்சரவை தீர்மானமொன்றினால் மேற்கொள்ளப்பட்டுள்ளது. |

## 1.6 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

### 1.6.1 பெறவேண்டிய பணம்

| | **கணக்காய்வு அவதானிப்பு** | **முகாமைத்துவத்தின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|---|
| (அ) | 02 வீடமைப்பு கருத்திட்டங்கள் தொடர்பாக மீளாய்வாண்டு இறுதியில் அறவிட வேண்டியதாக நிலவிய வாடகை வருமானம் ரூபா | செயற்பாடற்ற கடன்களிற்காக சட்ட நடவடிக்கை எடுக்கவும் ஏனைய நிலுவை தொகையை அறவிடவும் நடவடிக்கை | அறவிட வேண்டிய வீட்டு வாடகை மற்றும் கடன் தவணைகளை |

| | | | |
|---|---|---|---|
| | 75,462,935 வில் ஆண்டு 1 – 2 இற்கிடையிலான காலமாக அறவிட வேண்டிய வாடகை வருமானம் ரூபா 12,079,528 உம், ஆண்டு 2–5 இற்கிடையிலான அறவிட வேண்டிய மீதி ரூபா 34,769,303 உம், ஆண்டு 5 யை விஞ்சிய காலமாக அறவிட வேண்டியதாக நிலவிய மீதி ரூபா 16,384,576 ஆனது. | எடுக்கப்படும். | விரைவில் அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | 05 வீடமைப்பு கருத்திட்டங்களிற்கு மற்றும் 03 சலுகைக் கடன் உத்தேச திட்டங்களிற்குரிய மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதிக்கு அறவிட வேண்டியதான கடன் தவணை தொகை ரூபா 130,973,939 ஆனதுடன் அவற்றில் ஆண்டு 1–2 இற்கிடையிலான காலமாக அறவிட வேண்டிய கடன் மீதி ரூபா 23,162,568 உம், ஆண்டு 2–5 இற்கிடையிலான காலமாக அறவிட வேண்டிய கடன் மீதி ரூபா 50,610,420 உம், ஆண்டு 5 யை விஞ்சிய காலமாக அறவிட வேண்டியதாக நிலவிய மீதி ரூபா 35,166,939 உமானது. | செயற்பாடற்ற கடன்களிற்காக சட்ட நடவடிக்கை எடுக்கவும் ஏனைய நிலுவை தொகையை அறவிடவும் நடவடிக்கை எடுக்கப்படும்.<br>நீண்ட காலமாக நிலுவை கடன் தவணையுள்ள பயன்பெறுனர்களுடன் புதிய உடன்படிக்கை கைச்சாத்திட்டு கடனை மீள் கட்டமைக்க கலந்துரையாடப்படுகிறது. | அறவிட வேண்டிய வீட்டு வாடகை மற்றும் கடன் தவணைகளை விரைவில் அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (இ) | கடமை நிறுத்தம் மற்றும் கடமையிலிருந்து ஓய்வு பெற்ற அலுவலர்களிடமிருந்து மீளாய்வாண்டில் திசெம்பர் 31 திகதியளவில் அறவிட வேண்டிய இடர் கடன் மீதியினுள் நிலவிய ரூபா 313,952 மீதியிலிருந்து ரூபா 171,626 தொகை 5 ஆண்டுகளை விஞ்சி நிலுவையாக காணப்பட்டது. | அதிகார சபையிலிருந்து நீங்கிய ஊழியர்களிடமிருந்து அறவிட வேண்டிய இடர் கடன் நிலுவை மற்றும் வீட்டு கடன் நிலுவை மீதியை அறவிட அந்த நீங்கிய ஊழியரின் சிலருக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டுள்ளதுடன், தற்போது கடமையிலுள்ள பிணை ஒப்பமிட்டவரின் சம்பளத்திலிருந்து அறவிட நடவடிக்கை எடுக்கப்பட்டுளளது. இங்கு ஒருவர் மாத்திரம் அவரிற்கு சம்பளம் செலுத்தாத காலத்தில் நிலுவையான ரூபா 85,974.13 தொகையை 2022 ஜுலை மாதம் முதல் 18 மாதாந்த தவணைகளில் சம்பளத்திலிருந்து குறைத்துக் கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும். | அலுவலர்களிடமிருந்து அறவிட வேண்டிய தொகையை அறவிட தேவையான செயற்பாடுகளை எடுக்க வேண்டும். |

**1.6.2 செலுத்த வேண்டிய பணம்**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| செத்சிரிபாயவில் அமைந்துள்ள அலுவலக வளவிற்கு கொடுப்பனவை இடைநிறுத்தியிருந்த நகர அபிவிருத்தி அதிகார சபைக்கு செலுத்த வேண்டிய அலுவலக வாடகையை கடந்த ஆண்டிலிருந்து மீண்டும் செலுத்த ஆரம்பித்திருந்த போதும் 2016 ஆண்டு முதல் மீளாய்வாண்டு இறுதி வரை நிலுவையான அலுவலக வாடகை ரூபா 27.39 மில்லியனானது. | ரூபா 27.39 மில்லியனான மீதியிளுள்ள ரூபா 12.64 மில்லியன் தொகை 2021 ஆண்டின் செலவு ஒன்றாவதுடன், தற்போது ரூபா 12.64 மில்லியன் தொகையை செலுத்தி முடிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அதன் பிரகாரம், ரூபா 14.74 மில்லியன் தொகையை பகுதிகளான செலுத்த நடவடிக்கை எடுக்கப்படும். | செலுத்த வேண்டிய அலுவலக வாடகையை விரைவில் தீருக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**1.7 சட்டங்கள் விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடனான இணக்கமின்மைகள்**

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணக்கமின்மைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|---|
| (அ) | (i) 2008 இன் 36 இலக்க நகர குடியிருப்பு அபிவிருத்தி அதிகார சட்டம் | நகர குடியிருப்பு அபிவிருத்திக்காக தேசிய கொள்கையொன்றை தயாரிக்க மற்றும் அக் கொள்கையை செயற்படுத்துவதனை உறுதி செய்ய அதிகார சபை நிறுவப்பபடட் போதும், அதிகார சபையை நிறுவி 13 வருடங்கள் கடந்திருந்த போதும் இந்த தேசிய கொள்கையை தயாரிக்க மற்றும் செயற்படுத்த அதிகார சபைக்கு இயலாதிருந்தது. அவ்வாறே சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் அதிகார சபையினால் தலைவர் உள்ளிட்ட 14 அங்கத்தவர்களுக்கு மேற்படாத அலோசனைக் குழுவொன்றை 2017 | தேசிய கொள்கை ஒன்றை தயாரிக்க 2017 ஆண்டு முதல் தலைவர் உள்ளிட்ட 14 அங்கத்தவர்களுடன் கூடிய அலோசனைக் குழு ஒன்று நியமிக்கப்பட்டிருந்த போதும் தேசிய கொள்கையொன்றை தயாரிக்க எடுத்த முயற்சிகள் தோல்வியடைந்தன. புதிய ஆலோசனைக் குழுவொன்று நியமிக்கப்பட்டதுடன் அவ் ஆலோசனை குழுவின் மூலம் தேசிய கொள்கை ஒன்றை தயாரிக்க ஆரம்பிக்கப்பட்டுள்ளது. 2022 ஆண்டு இறுதியில் வரைபு கொள்கையொன்றை தயாரிக்க ஆலோசனைக் குழு எதிர்பார்கின்றது. கடந்த ஆண்டுகளிலும் | கூட்டுத்தாபன சட்டத்தின் நோக்கங்களிற்கு இணங்க வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | ஏப்ரல் மாதமளவில் நியமிக்கப்பட்டிருந்த போதும் மீளாய்வாண்டு இறுதி வரையும் அதிகார சபையின் முன்மொழிவுகள், திட்டம், கருத்திட்டம் மற்றும் செயல் நடவடிக்கை திட்டம் போன்ற அதிகார சபையின் நோக்கத்துடன் தொடர்பான செயற்பாடுகளை இனங்கண்டிருக்கவில்லை. | சொத்துக்களை வெளியேற்றும் முறைமை, ஆலோசனை குழுவிற்கு சமர்பித்து கருத்துக்கள் மற்றும் முன்மொழிவுகளை பெற்றுக் கொள்ளப்படுவதுடன் அதிகார சபையின் முன்மொழிவுகள், திட்டம், கருத்திட்டத்தை செயற்படுத்தும் போது ஆலோசனைக் குழுவின் ஆலோசனைகள் பெற்றுக் கொள்ளப்பட்டன. | |
| (ஆ) | 1971 இன் 38 இலக்க நிதிச் சட்டத்தின் 11 (ஆ) பிரிவு | நிதியமைச்சரின் இணக்கப்பாட்டை பெற்றுக் கொள்ளாது கட்டுப்பாட்டு சபையின் அங்கீகாரத்தின் மீது அதிகார சபையினால் மீளாய்வாண்டினுள் நிலையான வைப்புக்களில் ரூபா 1,195 மில்லியன் முதலீடு செய்யப்பட்டிருந்தன. | நகர குடியிருப்பு அபிவிருத்தி அதிகார சட்ட பிரகாரம் அச் சட்டத்தின் நோக்கங்களை அடைந்து கொள்ள நிதியமொன்றை ஏற்படுத்தி நிதியை திரட்டிக் கொள்ள பொது திறைசேரியின் எழுத்து மூல அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் அந் நிதியத்தை நடைமுறை கணக்குகினூடாக நடாத்திச் செல்வதன் மூலம் ஏற்படும் நிதி நட்டத்தை தவிர்த்துக் கொள்ள உயர் வட்டி விகிதத்தின் கீழ் அரச வங்கியினுள் நிலையான வைப்பாக நடாத்திச் செல்ல நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | நிதிச் சட்டத்தின் ஏற்பாடுகள் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (இ) | இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை | | | |
| (i) | நி.பி. 261 (2) | காசோலைகள் மூலம் கொடுப்பனவு செய்யும் சந்தர்ப்பங்களில் காசோலை இலக்கத்தை குறித்த வவுசரில் போன்றே காசுப் புத்தகத்தில உரிய குறிப்பின் முன் குறிக்க வேண்டிய போதும் அதிகார சபையினால் மீளாய்வாண்டில் ஜனவரி | (i)காசோலை இலக்கத்தை வவுசரில் போன்றே காசுப் புத்தகத்திலும் குறிக்க நடவடிக்கை எடுப்பதுடன், விடுபவதை தவிர்க்க தற்போதும் நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | நிதிப் பிரமாணகளிற்கு இணங்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | மற்றும் ஆகஸ்ட் மாதங்களிற்குரிய 152 மீண்டுவரும் கொடுப்பனவு சந்தர்பங்களில் ரூபா 31,088,815 இற்குரிய வவுசர்களில் காசோலை இலக்கம் குறிப்பிடப்படவில்லை. | | |
| (ii) | நி.பி. 262 (2) | ஒரு முறை கொடுப்பனவிற்கு சமர்பிக்கப்பட்ட, வவுசர்கள் மீண்டுமொரு முறை கொடுப்பனவிற்கு சமர்பிக்கப்படுவதன் அபாயத்தை தவிர்க்க கொடுப்பனவு செய்த அனைத்து வவுசர்களிற்கும் அதனை உறுதி செய்யும் ஆவணங்களிலும் ‘‘கொடுப்பனவு செய்யப்பட்டது’’ முத்திரை பதிக்கப்பட வேண்டிய போதும், மீளாய்வாண்டினுள் கொடுப்பனவு செய்த ரூபா 2,240,763 பெறுமதியான 04 வவுசர்கள் தொடர்பாக அவ்வாறு செய்துள்ளதாக அவதானிக்கப்படவில்லை. | ‘‘கொடுப்பனவு செய்யப்பட்டது’’ முத்திரையை அனைத்து பணம் செலுத்தும் வவுசர்களை உறுதி செய்யும் ஆவணங்களும் விடுபடாது பதிக்க தற்போதும் நடவடிககை எடுக்கப்படுகின்றது. | நிதிப் பிரமாணகளிற்கு இணங்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (iii) | நி.பி. 262 (3) | கொடுப்பனவு செய்வது காசோலைகளினூடாக எனின் குறித்த காசோலைக்கு கையொப்பமிடும் சந்தர்ப்பத்தில் கொடுப்பனவு உத்தியோகத்தரினால் தமது கையொப்பத்தை அல்லது குறுங்கையொப்பத்தை ஏனும் குறித்த கொடுப்பனவு வவுசரில் மற்றும உறுதி செய்யும் ஆவணங்களில் இட வேண்டிய போதும் அதிகார சபையினால் 44 சந்தர்பங்களில் கொடுப்பனவு செய்த ரூபா 5,297,906 இற்குரிய | கொடுப்னவு வவுசர்களிலும் உறுதி செய்யும் ஆவணங்களிலும் விடுபடாதவாறு கையொப்பத்தை இட தற்போது நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | நிதிப் பிரமாணகளிற்கு இணங்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | வவுசர்களில் கொடுப்பனவு உத்தியோகத்தரினால் தமது கைரொப்பத்தை அல்லது குறுங்கையொப்பத்தை இட்டிருக்கவில்லை. | | |
| (iv) | நி.பி. 371 (2) (ஆ) | • மீளாய்வாண்டினுள் 13 சந்தர்ப்பங்களில் 12 அலுவலர்களுக்கு வழங்கியிருந்த ரூபா 3,000 இற்கும் ரூபா 60,000 இற்கும் இடையிலான வீச்சளவிலான ரூபா 218,000 ஆன விஷேட முற்பணம் குறித்த செயற்பாட்டிற்காக செலவிடப்படாது 01 நாள் முதல் 30 நாட்கள் வரையான காலமாக கையிறுப்பில் வைத்துக்கொண்டிருந்த பின்னர் தீர்க்கப்பட்டிருந்தன. | • அதிகார சபையின் மனித வள அபிவிருத்தி நிகழ்சித் திட்டங்கள் பெறும்பாளான நேரங்களில் விஷேட முற்பணம் பெற்றுக் கொள்வதனூடாக செயற்படுத்தப்படுவதுடன், குறித்த பிரிவு பொறுப்பாளரின் பரிந்துரை மற்றும் மேற்பார்வையின் கீழ் அவ் வேலைத் திட்டங்கள் மேற்கொள்ளப்படுகிறது. மேற்கொள்ள நியமிக்கப்படும் வேலைத் திட்டங்களிற்கு முற்பணத்தை பெற்றுக் கொள்ளவும் குறித்த விடயம் இடம்பெறாத சந்தர்ப்பங்களில் உடனடியாக தீர்க்க குறித்த அலுவலர்களுக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. | முற்பணத்தை உரிய காலத்தினுள் தீர்த்துக் கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| | | • ஏதேனும் விஷேட செயற்பாட்டிற்காக பதவிநிலை மட்ட அலுவலர்களுக்கு மாத்திரம் ஒரு சந்தர்ப்பத்தில் மாத்திரம் ரூபா 100,000 உச்ச அளவு வரை நிமித்த உப கட்டுநிதி வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன் மீளாய்வாண்டில் நிதிப்பிரமாணங்களிற்கு மாற்றமாக 07 சந்தர்ப்பங்களில் அலுவலர்களுக்கு | • பொதுவாக ரூபா 100,000/= வரை மாத்திரம் நிமித்த உப கட்டுநிதி வழங்கப்படுவதுடன், சில விஷேட சந்தர்பங்களில் மாத்திரம் அதாவது, பணிப்பாளர் குழுக் கூட்டம் மற்றும் ஏனைய வகையில் நடைபெறும் கூட்டங்களில் ஒரே முறையில் செலுத்தும் படிகளை கொடுப்பனவு செய்கையில் மாத்திரம் ரூபா 100,000/= இற்கு | நிதி எல்லைகளை விஞ்ச வேண்டி ஏற்படும் சந்தர்ப்பங்களில் அதற்காக பொது திறைசேரியின் முன்கூட்டிய அனுமதியை பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | ரூபா 104,000 இற்கும் ரூபா 120,000 இற்குமிடையிலான வீச்சளவில் கூட்டத் தொகை ரூபா 752,000 ஆன நிமித்த உப கட்டுநிதி வழங்கப்பட்டிருந்தன. | அதிக முற்பண தொகையை செலுத்த மாத்திரம் அங்கீகாரம் வழங்கப்படுகின்றது. | |
| | | • அந்தவொறு அலுவலருக்கும் வழங்கும் நிமித்த உப கட்டுநிதியை அச்செயல் பூர்த்தி செய்த உடனே தீர்க்க நடவடிக்கை எடுக்க வேண்டிய போதும் அதிகார சபையின் உத்தியோகத்தர்களுக்கு 34 சந்தர்ப்பங்களில் வழங்கிய ரூபா 788,170 ஆன முற்பணத்தை தீர்க்க 35 நாட்கள் முதல் 263 நாட்களிற்கு இடையிலான காலம் கடந்துள்ளதாக கணக்காய்வின் அவதானிக்கப்பட்டது. | • குறித்த செயற்பாடுகள் பூர்த்தியான உடனே உப கட்டுநிதியை தீர்க்க அனைத்து பிரிவுகளிற்கும் ஆலோசனை வழங்கப்பட்டுள்ளதுடன், உரிய திகதிக்கு முன்னர் தீர்ப்பது தொடர்பாக தொடர்ந்தும் கவனம் செலுத்தப்படுகிறது. முற்பணத்தை தீர்ப்பது தொடர்பாக சுற்றறிக்கை பிரகாரம் செயற்படாதவர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்குமாறு பிரிவு பிரதானிகளுக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. | முற்பணத்தை உரிய காலத்தினுள் தீர்த்துக் கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஈ) | இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் தாபன விதிக்கோவை II அத்தியாயத்தின் 13.1.2 மற்றும் 13.4 பந்திகள் | ஏதேனும் பதவியில் பதிற்கடமைக்காக அப்பதவியை வகிக்க அங்கீகார ஆட்சேர்ப்பு திட்டத்தின் பிரகாரம் எல்லா வகையிலும் தகைமையுடைய ஓர் அலுவலர் நியமிக்கப்பட வேண்டிய போதும் அதிகார சபை அதற்கு மாற்றமாக 2021 திசெம்பர் 29 திகதி நிறைவேற்று மட்ட 03 பதிற்கடமை பதவிகளிற்காக உரிய தகைமைகளை பூர்த்தி செய்யாத அலுவலர்கள் நியமிக்கப்பட்டிருந்தனர். | அதிகார சபையின் நிறைவேற்று மட்ட வெற்றிடமான 03 பதவிகளின் கடமைகள் செயலிழந்து போவதால் மற்றும் புதிய நியமனங்கள் நிறுத்தப்பட்டுள்ள காரணத்தால் உள்ளக நேர்முக பரீட்சை மூலம் அதிக தகைமைகளை பூர்த்தி செய்த 03 அலுவலர்களை பதிற்கடமை அடிப்படையில் பதவிகளிற்கு ஈடுபடுத்தப்பட்டனர். | வெற்றிடங்களை நிரப்பும் போது அங்கீகார ஆட்சேர்ப்பு திட்டத்திற்கு இணங்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவு ரூபா 784,619,371 மிகை ஒன்றானதுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மிகை ரூபா 2,170,456 ஆனது. அதற்கமைய நிதி விளைவுகளில் ரூபா 782,448,915 ஆன வளர்ச்சியொன்று அவதானிக்கப்பட்டது. முனாவ வீடமைப்பு அபிவிருத்தி வேலைத்திட்டத்தின் வீடுகளை விற்பனை செய்ததால் கிடைத்த மொத்த பெறுமதியையும் அதிகார சபையின் வருமானமாக கணக்கீடு செய்தமை இந்நிலைமைக்கு பிரதான காரணமாக காணப்பட்டது.

### 2.2 பிரதான வருமானம் மற்றும் செலவின விடயங்களின் போக்குப் பகுப்பாய்வு

கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டில் பொது திறைசேரி மீண்டுவரும் மானியம் ரூபா 26 மில்லியனினால் அதாவது 20 சதவீதம் அதிகரித்திருந்ததுடன் மனிதவள அபிவிருத்தி வேலைத்திட்டத்திற்கு கிடைத்த பொது திறைசேரி ஏற்பாடு ரூபா 16 மில்லியனினால் அல்லது 145 சதவீதத்தால் அதிகரித்திருந்தது. அவ்வாறே அதிகார சபையின் சம்பளம், மேலதிக நேரக் கொடுப்பனவு மற்றும் ஏனைய படிகள் ரூபா 10 மில்லியனினால் அல்லது 15 சதவீதத்தால் அதிகரித்திருந்தன.

### 2.3 விகிதப் பகுப்பாய்வு

கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் தேறிய மிகை விகிதம் 77 சதவீதத்தால் அதிகரித்திருந்ததுடன் முனாவ வீடமைப்பு கருத்திட்டத்தின் வீடுகளை விற்பனை செய்ததால் கிடைத்த வருமானம் ரூபா 766 மில்லியனான மொத்த பெறுமதியும் வருமானமாகக் காட்டியிருந்தமை இந்நிலைமைக்கு பிரதான காரணமாககாணப்பட்டது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்பாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | அதிகார சபையின் 0072703594 கொண்ட வங்கி நடைமுறைக் கணக்கிற்கு வீட்டு விண்ணப்பதாரர்களிடமிருந்து மற்றும் கொள்வனவு செய்தவர்களிடமிருந்து தவணைகளாக கிடைக்கும் நேரடி வைப்புக்களை இனங்காண அதிகார சபையினால் சரியான முறைமை ஒன்றை செயற்படுத்தாத காரணத்தால் மீளாய்வாண்டு இறுதியளவில் இனங்காணப்படாத மீதிகள் ரூபா 16,279,125 ஆனது. இவற்றில் ரூபா 5,706,230 தொகை 2019 ஜுன் முதல் 2021 நவம்பர் 30 வரையான காலத்திற்கு உரியதானதுடன் அம் மீதிகளை இனங்கண்டு தீர்க்க மீளாய்வாண்டு இறுதி வரையும் அதிகார சபை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | அதிகார சபைக்கு அறவிட வேண்டிய தொகையை 0072703594 கொண்ட கணக்கிற்கு நேரடியாக வைப்புச் செய்ய குறித்த கடன்தாரர்களை விழிப்பூட்டியதுடன், இச் செயன்முறையிற்கு நேரடியாக வைப்புச் செய்யும் பயன்பாட்டாளர்களுக்கு குறித்த வட்ஸ் எப் (Whats App) இலக்கமொன்றை அறிமுகப்படுத்தியதுடன், இதற்காக பண வைப்பு பத்திரத்தில் நிழற் பிரதியொன்றை குறித்த இலக்கத்திற்கு அனுப்புமாறு அறிவூட்டப்பட்டனர். அதன் | நேரடி வைப்புக்களை விரைவில் இனங்காண்பதற்காக முறையான வேலைத் திட்டமொன்றை ஏற்படுத்த வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | பிரகாரம் குறித்த வட்ஸ் எப் (Whats App) இலக்கத்திற்கு கிடைக்கும் வைப்புப் பத்திரங்கள் மற்றும் வங்கி விபரக்கூற்றின் மீதிகளுடன் இணக்கஞ் செய்து குறித்த கொடுக்கல் வாங்கல் இனங்காணப்படும். தற்போது ரூபா 208.950 ஆம் மீதி தவிர எஞ்சிய தொகையை தீர்க்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | |
| (ஆ) | அதிகார சபையினால் மீளாய்வாண்டு இறுதியில் நிர்மாணத்தை பூர்த்தி செய்த 03 வீடமைப்பு கருத்திட்டங்களில் மற்றும் நிர்மாணித்துக் கொண்டிருக்கும் ஓர் வீடமைப்பு கருத்திட்டத்தில் காணப்படும் 512 வீட்டு அலகுகளிற்குரிய ஹெக்டயார் 2.21 காணியை தொடர்புடைய நிறுவனங்களிலிருந்து சுவீகரித்தலை பூர்த்தி செய்ய மீளாய்வாண்டு இறுதி வரையும் இயலாதிருந்தது. அதன் காரணமாக நிர்மாணித்து உரிமையை ஒப்படைத்துள்ள வீட்டு உரிமையாளர்களுக்கு காணி உறுதிகளை வழங்கும் தாமதம் இடம் பெறுவதாக கணக்காய்வின் போது மேலும் அவதானிக்கப்பட்டது. | அரச காணி கட்டளைச் சட்டத்தின் கீழ் முன்நடவடிக்கைகளை விரைவில் ஒருங்கிணைப்பு செய்து இக் காணித் துண்டுகளை அதிகார சபைக்கு சுவீகரிக்க நடவடிக்கை எடுக்கப்படும். | காணிகளை சுவீகரிக்கும் நடவடிக்கைகளை விரைவுபடுத்த முயற்சி எடுக்க வேண்டும். |
| (இ) | தளவாக்கலை வீடமைப்பு கருத்திட்டத்தில் பயன்பாட்டாளர்களுக்கு அதிகார சபையினால் 2019 ஆண்டு வழங்கியிருந்த 15 வீடுகளை அதிகார சபையின் அங்கீரமின்றி வேறு நபர்களுக்கு 2019 ஆண்டில் விற்பனை செய்து அல்லது வாடகைக்கு வழங்கப்பட்டிருந்ததுடன் அப் பயன்பாட்டாளர்களுக்கு எதிராக மற்றும் 2019 ஆண்டு முதல் 10 வீடுகளில் குடியேறியுள்ள அனுமதியற்ற நபர்களை அகற்ற சட்ட ரீதியான நடவடிக்கைகளை மீளாய்வாண்டு திசெம்பர் 31 வரை எடுத்திருக்கவில்லை. | மூன்றாம் தரப்பினருக்கு வழங்கியுள்ளதாக இனங்காணப்பட்ட பயன்பாட்டாளர்கள் குடியேறவில்லை எனின் காணியிலிருந்து மற்றும் வீட்டிலிருந்து வெளியேற்றுவதற்காக சட்ட ரீதியான நடவடிக்கை எடுப்பதாக 2021.11.08 திகதியிலான எழுத்து மூலம் அறிவித்துள்ளதுடன் எதிர்காலத்தில் தேவையான சட்ட நடவடிக்கை எடுக்க தொடர்புடைய பிரிவிற்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. அனுமதியற்ற 15 குடியிருப்பாளர்களை இனங்கண்டுள்ளதுடன் அவற்றில் இரண்டு | அனுமதியின்றி மூன்றாம் தரப்பினருக்கு வீடுகளை வழங்கியுள்ளவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | பேர்கள் அதிகார சபையுடன் உடன்படிக்கை கைச்சாத்திடாது போலி ஆவணங்களை தயாரித்து குறித்த வீடுகளை அனுமதியின்றி வழங்கியுள்ளதாக வெளிப்பட்டுள்ளதுடன் அதற்காக சட்ட நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. | |
| (ஈ) | சிலாபம் வீடமைப்பு கருத்திட்டத்தின் கால்வாய் தொகுதியை அமைக்க 2015 ஆண்டில் ரூபா 2.86 மில்லியன் அதிகார சபைக்கு கிடைத்திருந்த போதும் மீளாய்வாண்டு இறுதியளவிலும் அச் செயற்பாட்டை மேற்கொண்டிருக்கவில்லை. | அடிக்கடி விலைகளில் ஏற்பட்ட அதிகரிப்பு காரணமாக பல தடவைகளாகவும் மதிப்பீட்டுக் கிரயம் திருத்தப்பட்ட இக்கருத்திட்டத்திற்கு உரியதாக அரச பெறுகைகள் வழிகாட்டிகளிற்கு இணங்க உள்நாட்டு போட்டி பெறுகைகள் முறைமையின் கீழ் விலைமனு கோரல் 2022 ஏப்ரல் மாதம் ஆரம்பித்த போதும் தற்போதைய உயர் பணவீக்க பொருளாதார நிலையின் கீழ் எந்தவொறு ஒப்பந்ததாரரும் இதுவரை முன்வரவில்லை. அதனால் அண்மையில் மீண்டும் விலைமனு கோருவதற்கு எதிர்பார்பதுடன் நிலவும் ரூபாய் பெறுமதி வீழ்ச்சியடைந்ததன் காரணமாக ஒப்பந்ததாரர்கள் முன்வராதமை பிரச்சினைக்குரிய நிலைமை என குறிப்பிட வேண்டும். | திட்டமிட்ட காலத்தினுள் குறித்த கருத்திட்ட செயற்பாடுகளை பூர்த்தி செய்ய வேண்டும். |

**3.2 சர்ச்சை தன்மையான கொடுக்கல் வாங்கல்கள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | அதிகார சபையினால் மீனவ மக்களுக்காக நிர்மாணிக்கப்பட்ட அங்குலான வீட்டுக் கட்டிடத் தொகுதியில் காணப்படும் 288 வீடுகளில் ரூபா 62.87 | இங்கு சினிமா கலைஞர்களுக்கு மற்றும் விளையாட்டு வீரர்களுக்கு வழங்கியுள்ள 53 வீடுகள் | அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் அதிகார சபைக்கு கிடைக்க |

| | | | |
|---|---|---|---|
| | மில்லியன் பெறுமதியான 53 வீட்டு அலகுகளை பணம் அறவிடாது சுதந்திர ஒப்படை பத்திரத்தின் மூலம் 2016 செப்டம்பர் 26 இலிருந்து 2019 பெப்ரவரி 12 இடையிலான காலத்தினுள் சினிமா கலைஞர்களுக்கு மற்றும் விளையாட்டு வீரர்களுக்கு உடமையை வழங்கியிருந்த போதும் பின்னர் அதாவது 2019 செப்டம்பர் 18 திகதிய மற்றும் இலக்கம் அ.ம.ப/இலக்கம்/19/2761/122/085 கொண்ட அமைச்சரவை தீர்மானத்தின் மூலம் நியாயமான தொகையொன்றை பயனாளிகலிடமிருந்து அறவிட குறிப்பிட்டிருந்த போதும் மீளாய்வாண்டு இறுதி வரையும் எத்தொகையையும் அதிகார சபை அறவிட்டிருக்கவில்லை. அவ் வீடுகளிற்காக தொகையொன்றை அறவிட அமைச்சரவை தீர்மானத்தை பெற்றுக் கொள்ள முன்னர் வீடுகளை ஒப்படை பத்திரத்தின் மூலம் ஒப்படைத்திருந்தமை இதற்கு காரணமாக இருந்தது. | தொடர்பாக பிரச்சினைக்குரிய நிலைமை ஏற்பட்டுள்ளது. அதற்கு காரணமாவது குறித்த அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் அவர்களிடம் நியாயமான தொகையொன்றை அறவிட வேண்டுமென திறைசேரி அவதானத்தின் மூலம் காட்டியுள்ள போது அதன் போது இருந்த விடய பொறுப்பு அமைச்சரினால் சுதந்திர ஒப்படையாக அவரினாளே கையொப்பமிட்டு ஒப்படைப் பத்திரமொன்றை இவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. இது தொடர்பாக முன்நடவடிக்கை எடுக்க எங்களால் சட்டமா அதிபரின் ஆலோனையை கோரியுள்ள போதும் இதுவரை அவ்வாலோசனை கிடைக்கவில்லை. சட்டமா அதிபரின் ஆலோசனை கிடைத்த பின்னர் முன்நடவடிக்கை எடுக்கப்படும். பயனாளிகளுக்கு அமைச்சரின் கையொப்பத்துடன் கிடைத்துள்ள ஒப்படைப் பத்திரம் காரணமாக ஒருவர் தவிர மற்றைய அனைவர்களும் பணம் செலுத்த மறுப்புத் தெரிவித்துள்ளனர். | வேண்டிய பணத்தை உரிய பொறுப்புவாய்ந்த தரப்பினரிடமிருந்து அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டு இறுதியிளவில் நகர பிரதேசங்களில் வசிக்கும் குறைந்த வருமானமுடையவர்களின் வாழ்தை தரத்தை உயர்த்த பொது திறைசேரியின் மூலம் 2012 ஆண்டு முதல் 2021 ஆண்டு வரை 07 வீடமைப்பு கருத்திட்டங்கள் மற்றும் பரந்த வீடமைப்பு கடன் வழங்குவதற்கு பதிலாக ரூபா 716.11 மில்லியன்களை அதிகார சபைக்கு வழங்கியிருந்தது. இப் பணம் பல கருத்திட்டங்களின் ஊடாக குறைந்த வருமானமுடையவர்களுக்கு வழங்கியிருந்ததுடன் வழங்கிய வீடுகளில் பெறுமதி தவணைகளாக மற்றும் பரந்த | கடன் அறவிடலின் மூலம் கிடைக்கும் வருமானத்தை அதிகார சபையின் நிதியத்திற்கு செலவாவதுடன், அந் நிதிய நிலையான சொத்து மற்றும் அபிவிருத்தி கருத்திட்டத்திற்காக மாத்திரம் பயன்படுத்துவதுடன், மீண்டுவரும செலவுகளுக்காக பயன்படுத்துவதில்லை. | சட்ட ஏற்பாடுகள் பிரகாரம் நிதியமொன்றை உருவாக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | வீடமைப்பு கடன் தவணைகளாக மீளாய்வாண்டினுள் பயனாளிகளிடமிருந்து அறவிட்ட ரூபா 10.82 மில்லியனை 2008 இன் 36 இலக்க நகர குடியிருப்பு அபிவிருத்தி அதிகார சட்டத்தின் 16 பிரிவின் பிரகாரம் அதிகார சபையின் நிதியத்திற்கு செலவு வைக்கப்பட்டிருக்கவில்லை. | | |
| (இ) | மட்டுப்படுத்தப்பட்ட ரியில் எஸ்டேட் எக்ஸ்சேன்ஜ் (தனியார்) கம்பனியை அதிகார சபைக்கு சுவீகரிக்கும் போது ஏற்பட்டிருந்த நிதி மோசடி தொடர்பாக சட்டமா அதிபரினால் 2021 ஒக்டோபர் 28 திகதி வழங்கிய ஆலோசனை பிரகாரம் நட்டம் தொடர்பாக குறித்த நபர்களுக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்ய முடியுமா என்பதை பரிசீலிக்க நிதிப்பிரமாணம் 103 (அத்தியாயம் II) இன் கீழ் உரிய வரிசை அமைச்சினால் முயற்சி எடுத்து அது தொடர்பாக பொறுப்புவாயந்த நபர்களை மற்றும் அரசிற்கு ஏற்பட்டுள்ள நட்டத்தை சரியாக கணக்கிட வேண்டுமென குறிப்பிடப்பட்டுள்ள போதும் வரிசை அமைச்சு அது தொடர்பாக 2022 ஜுன் வரையும் முன்நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | கடுவெல மாவட்ட நீதிமன்ற வழக்கிலக்கம் 543/எம் ஆர் வழக்கை மீண்டும் மேன்முறையீடு செய்வது தொடர்பாக சட்டமா அதிபரின் ஆலோசனைப்படி இலங்கை குடியரசிற்கு ஏற்பட்ட நட்டம் தொடர்பாக நிதிப்பிரமாணம் 103 (அத்தியாசம் II) கீழ் குறித்த வரிசை அமைச்சினால் முயற்சி எடுக்க 2022.03.30 ஆம் திகதி இது தொடர்பாக வரிசை அமைச்சிற்கு அறிவித்துள்ளதுடன், இது வரை அது தொடர்பாக எவ்வித ஆலோசனையும் கிடைக்கவில்லை. | வரிசை அமைச்சின் தலையீட்டுடன் இதனை தீர்க்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஈ) | ஹம்பந்தொட சுகாதார சேவைகளை மேம்படுத்தும் (Sanitation Improvement Programme) வேலைத் திட்டத்திற்காக கடந்த ஆண்டுகளில் அதிகார சபைக்கு பொது திறைசேரியிலிருந்து கிடைத்த நிதியில் எஞ்சிய ரூபா 4,514,970 நிதியை மீளாய்வாண்டு இறுதி வரையும் தீர்க்க அதிகார சபையிற்கு இயலாதிருந்தது. | தற்போது இக் கருத்திட்டத்திற்குரிய அனைத்து பட்டியல்களிற்கும் கொடுப்பனவு செய்து அனைத்து வெளி பொறுப்பு மற்றும் கடப்பாடுகளையும் பூர்த்தி செய்துள்ளதுடன், தேசிய வீடமைப்பு அதிகார சபையினூடாக (NHDA) கிடைத்த எஞ்சிய ரூபா 4,514,970.00 ஆன நிதி ஏற்பாட்டை அதிகார சபையினால் மேற்கொள்ள உத்தேசித்துள்ள சுகாதார மற்றும் உட்கட்டமைப்பு சேவைகளை மேம்படுத்தும் கருத்திட்டத்திற்காக பயன்படுத்த பணிப்பளர் சபையின் அங்கீகாரம் 2022.06.16 திகதிய | குறித்த நிதியை விரைவில் தீர்க்க முயற்சி எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | 05/2022/03 இலக்க பணிப்பளர் சபை பத்திரத்தின் மூலம் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் சிலாபம் நரியாகொடெல்லவத்த மற்றும் தளவாக்கலை வீடமைப்பு கருத்திட்டம் போன்ற வீடமைப்பு கருத்திட்டங்களின் உத்தேச சுகாதார மற்றும் உட்கட்டமைப்பு சேவைகளை மேம்படுத்தும் கருத்திட்டத்திற்காக 2022 ஆண்டினுள் பயன்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது. | |
| (உ) | மனிதவள அபிவிருத்திக்காக மீளாய்வாண்டில் அதிகார சபைக்கு ரூபா 27 மில்லியனான ஏற்பாடு பொது திறைசேரியிலிருந்து கிடைத்திருந்ததுடன் அதில் ரூபா 22.05 மில்லியன் அதாவது 82 சதவீதத்தை மாத்திரம் குறித்த வேலைத் திட்டத்திற்காக செலவிடப்பட்டிருந்ததுடன் அவற்றிலும் ரூபா 7.60 மில்லியன் அதாவது 34 சதவீதம் வேலைத் திட்டத்தை செயற்படுத்துவதற்கான எரிபொருள், தங்குமிடம், உணவு பெற்றுக் கொள்ளல் போன்ற மீண்டுவரும் செலவுகளுக்காக செலவிடப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் மனிதவள அபிவிருத்திக்காக 66 சதவீத அளவு செலவிட்டிருந்ததுடன், கிடைத்த ரூபா 27 மில்லியனில் எஞ்சிய ரூபா 4.95 ஆன நிதியை அதிகார சபையின் மீண்டுவரும் செலவுகளிற்காக செலவிடப்பட்டுள்ளது. | நாட்டில் நிலவிய கொவிட் தொற்று நிலைமை காரணமாக திட்டமிட்டவாறு அபிவிருத்தி வேலைத் திட்டங்களை 2021 ஆண்டில் செயற்படாததால் அவ்வாண்டில் ஏற்பாடு எஞ்சியுள்ளது. இந்த ஏற்பாட்டை மீண்டுவரும் செலவாக செலவிடப்படாததுடன், எதிர்வரும் ஆண்டில் மனிதவள அபிவிருத்தி வேலைத் திட்டத்திற்காக பயன்படுத்தவுள்ளது. | பொது திறைசேரியால் வழங்கப்படும் மூலதன ஏற்பாட்டை மீண்டுவரும் செலவினத்திற்காக பயன்படுத்தக் கூடாது. |
| (ஊ) | ம.ப ரியில் எஸ்டேட் எக்ஸ்சேன்ஜ் (தனியார்) கம்பனியை (REEL) கலைத்து எஞ்சிய சொத்துக்களை மற்றும் பொறுப்புக்களை அதிகார சபைக்கு சுவீகரித்து 2 மாதங்களினுள் கணக்குகளை தீர்த்து மூடுவதற்கு அங்கீகாரம் வழங்கிய இலக்கம் 14/1293/517/031 மற்றும் 2014 செப்டம்பர் 30 திகதிய அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் அக்கம்பனியின் பொறுப்புக்களை தீர்க்க 2015 ஒக்டோபர் 12 திகதி அதிகார சபைக்கு கிடைத்த ரூபா 19.02 மில்லியனால் இனங்கண்ட 24 வெளித்தரப்பினருக்கு செலுத்துவதற்காக | கம்பனியை பதிவாளர் திணைக்களத்தின் 2019.01.03 திகதிய (PV5592 LIQURDATION) கடிதத்தின் அறிவித்தலிற்கு அமைய ரீல் கம்பனியை கணக்கிட்டு மூடிவிடும் செயற்பாட்டை முடிவுருத்தியுள்ளது. இப் பொறுப்புக்காக உரிமை கோரளும் அச் செயற்பாட்டினுள் முன்வைக்கப்படவில்லை. | வெளித்தரப்பினர்களுக்கு செலுத்த தயாராக்கியுள்ள காசோலை தொடர்பாக அத் தரப்பினர் அறிவூட்டப்பட வேண்டியதுடன் அதனை உறுதி செய்ய முடியுமான வகையில் அறிக்கைகளை பேணிக்கொள்ள வேண்டும். |

| | | |
|---|---|---|
| 2015 ஒக்டோபர் மாதம் அதிகார சபையின் வங்கிக் கணக்கிற்கு எழுதப்பட்ட ரூபா 7.11 மில்லியனான காசோலைகள் 6 வருட காலமாக 2021 திசெம்பர் வரை அத்தரப்பினருக்கு ஒப்படைக்க நடவடிக்கை எடுக்காது, அக்காசோலை பெறுமதியில் ரூபா 4.45 மில்லியன்களை 2 வீடமைப்பு கருத்திட்டங்களிற்குரிய வீட்டு பயனாளிகளினால் அக் கருத்திட்டங்களின் முகாமைத்துவ கூட்டுத்தாபன நிதியத்திற்கு செலுத்தியிருந்த போதும் அதிகார சபையினால் வேறு விடயங்களிற்காக செலவிட்டிருந்த நிதியை தீர்க்கவும் எஞ்சிய ரூபா 2.66 மில்லியனான நிதியை மீளாய்வாண்டின் வருமானமாகவும் கணக்கீடு செய்யப்பட்டிருந்தன. | அதன் பிரகாரம், பணிப்பாளர் சபை தீர்மானத்தின் படி இரண்டு வீடமைப்பு கருத்திட்டங்களிற்குரிய கூட்டு ஆதன முகாமைத்துவ கூட்டுத்தாபன நிதியத்திற்காக அவ் ஏற்பாடு ஒதுக்கப்பட்டுள்ளதுடன், எஞ்சிய நிதி அதிகார சபையின் நிதியத்திற்கு செலவு வைக்கப்பட்டுள்ளது. | |

**3.3 விளைவற்ற மற்றும் குறைபயன்பாட்டு சொத்துகள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | அதிகார சபைக்கு சொந்மான 03 வீடமைப்பு திட்டங்களில் காணப்படும் 16 வீடுகள் 2 ஆண்டுகளிற்கும் 5 ஆண்டுகளிற்கும் இடைப்பட்ட காலமாக மூடிவைக்கப்பட்டிருந்த காரணத்தால் அதிகார சபைக்கு திரட்டிக் கொள்ளக் கூடியதாக இருந்த வாடகை வருமானம் இழக்கப்பட்டிருந்தது | ‘‘துருஇதுருகம’’ பசுமை குடியிருப்பில் அமைந்துள்ள சுதாரக தொழிநுட்பத்தால் நிர்மாணிக்கப்பட்டள்ள 06 வீடுகளை நகர குடியிருப்பு அபிவிருத்தி அதிகார சபையிற்காக விடுமுறை விடுதியொன்றை நிர்மாணிக்க ஒதுக்கியுள்ளதுடன், தளவாக்கலை வீடமைப்பு திட்டத்தின் உடன்படிக்கை கைச்சாத்திடப்படாத 07 வீடுகளில் பயனாளிகள் உடன்படிக்கை கைச்சாத்திடுவதை மறுத்து வருகின்றனர். எதிர்காலத்தில் அதற்காக ஒழுங்கான முறையொன்றை பின்பற்றி வெளியேற்ற நடவடிக்கை எடுக்கப்படும். அநுராதபுர ‘‘துருஇதுருகம’’ பசுமை குடியிருப்பில் வெளியேற்ற வேண்டிய 02 வீடுகளில் அனுமதியற்றவர்கள் குடியேறியுள்ளதால் அநுராதபுர நீதவான் நீதிமன்றில் அரச காணிகளின் உடமையை | குறித்த வீடுகளை விரைவில் வெளியேற்றுவதற் குரிய முயற்சிகளை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | மீண்டும் பெற்றுக் கொள்ளும் சட்டத்தின் கீழ் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளதுடன், வழக்கு முடிவடைந்தவுடன் விரையில் இந்த 02 வீடுகளையும் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும். | |
| (ஆ) | சரியான சாத்தியப்பாட்டு ஆய்வொன்றின்றி கண்டி மஹய்யாவ பிரதேசத்தில் 12 ஏக்கர்கள் நிலப் பரப்பில் வசதி குறைந்த 1220 வீடுகளிற்காக நிலையான வீடுகளை அமைக்க திட்டமிட்ட கருத்திட்டத்திற்காக மண்சரிவு அபாயமற்ற நிலப் பரப்பு 04 ஏக்கர்களுக்கு மட்டுப்படுத்தப்பட்டதால் அதிகார சபையினால் கருத்திட்ட நடவடிக்கைகளை கைவிட்டிருந்ததுடன் கருத்திட்டத்திற்காக அதுவரை மேற்கொண்ட ரூபா 1,855,411 ஆன செலவு விளைவற்ற செலவொன்றானதுடன் அது அதிகார சபையின் இலாபத்திற்கு எதிராக பதிவழிக்காது நடைமுறை வேலைகளின் கீழ் கணக்குகளில் காட்டப்பட்டிருந்தது. | குறித்த நிலம் தொடர்பாக மேற்கொண்ட பரிசோதனையின் மூலம் இந்நிலத்தின் 12 ஏக்கர்களில் 02 ஏக்கர்கள் நிர்மாணத்திற்கு பொருத்தமற்றதாக தேசிய கட்டிடங்கள் ஆராய்ச்சி நிறுவனத்தினால் வழங்கிய அறிக்கை மூலம் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. எவ்வாறாயினும் உத்தேச பாகிஸ்தான் அரசாங்க கடன் உதவி கிடைக்காததால் அரச மற்றும் தனியார் கூட்டிணைந்த அடிப்படையில் இந்த உத்தேச திட்டத்தை செயற்படுத்த பல சாத்தியப்பாட்டு ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன.<br><br>அதன் பிரகாரம், இக் கருத்திட்டத்மை PPP முறைமையின் கீழ் மேற்கொள்ள பொருத்தமற்றதென உறுதியானதால் கருத்திட்டம் நிறுத்தப்பட்டது.<br><br>எவ்வாறாயினும் சாத்தியப்பாட்டு ஆய்வு இல்லாத கருத்திட்டத்திற்காக மேற்கொள்ளப்பட்ட ஆரம்ப செலவுகள் நகர குடியிருப்பு அதிகார சபைக்கு நிதி ரீதியான நட்டத்தை ஏற்படுத்தியுள்ளது. | கருத்திட்டத்தை ஆரம்பிக்க முன்னர் சாத்தியப்பாட்டு ஆய்வொன்றை மேற்கொள்ள வேண்டியதுடன் விளைவற்ற செலவுகளை உரிய அங்கீகாரத்துடன் கணக்குகளிலிருந்து அகற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 3.4 பெறுகைகள் மற்றும் ஒப்பந்த செயற்பாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | ஒப்பந்த பெறுமதி ரூபா 14.19 மில்லியனான அங்குலான சயுரபுர மாடி வீட்டு கட்டிடத் தொகுதியின் நலன்புரி கட்டிட நிர்மாண ஒப்பந்தத்தின் பூர்த்தி செய்த வேலைகளின் பெறுமதி ரூபா 5.85 மில்லியனாக இருக்கையில் ஒப்பந்ததாரரினால் கருத்திட்டத்தை 2019 ஆண்டில் கைவிட்டிருந்ததால் ஒப்பந்ததாரருக்கு வழங்கியிருந்த வேலை பூர்வ முற்பணத்திலிருந்து மீளாய்வாண்டு இறுதியில் அறவிட வேண்டியதான ரூபா 1.32 மில்லியனான மீதியை அறவிட இயலாதிருந்தது. | இந்நிலுவைப் பணத்தை பெற்றுக் கொள்ள அடிக்கடி தேசிய இயந்திர உபகரண நிறுவனதுடன் (NEMO) கலந்துரையாடி உள்ளதுடன் அதன் விளைவாக இலக்கம் NP/C/16/24 கொண்ட 2022.04.08 திகதிய கடிதம் மூலம் மேற்குறித்த தொகையை எமது நிறுவனத்திற்கு செலுத்த அவர்களின் இணக்கப்படாட்டை தெரிவித்துள்ளனர். அதன் பிரகாரம், எமது 2022.05.17 திகதிய USDA/ENG/08/07 Fin III கொண்ட கடிதம் மூலம் அக் கொடுப்பனவை செலுத்த அவர்களால் முன்வைக்கப்படும் உத்தேசம் தொடர்பாக தற்போது எங்களால் விசாரிக்கப்பட்டுள்ளதுடன் அப் பணத்தை தொடர்ந்தும் செலுத்துவதை புறக்கணித்தால் வரிசை அமைச்சின் ஆலோசனை பிரகாரம் நீதிமன்ற செயன்முறைகளை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும். | குறித்த செயற்பாகளை விரைவில் பூர்த்தி செய்ய மற்றும் அறவிட வேண்டிய பணத்தை அறவிட முயற்சி எடுக்க வேண்டும். |

### 3.5 ஆளணி முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2021 திசெம்பர் 31 திகதியன்று அதிகார சபையின் அங்கீகார ஆளணி 182 ஆனதுடன் அத்திகதியில் உள்ளவாறான ஆளணி 135 ஆனது. அதன் பிரகாரம் ஆளணியில் 47 வெற்றிடங்களானதுடன் மிகை ஆளணி 02 ஆனது. | அங்கீகார ஆளணி 182 ஆனபோதும் நிலையான ஆளணி 153 ஆகும். மேலும் முகாதைத்துவ சேவைகள் திணைக்கள அங்கீகாரத்தின் மீது பொறியியல் பிரிவிற்காக 13 பேர்களை ஒப்பந்த அடிப்படையில் ஆட்சேர்க்க அங்கீகாரம் | கணக்காயவிற்கு சமர்பித்த தகவல்களின் பிரகாரம் உள்ளவாறான ஆளணி 135 ஆகும். அங்கீகார ஆளணியை திருத்தி |

| | | | |
|---|---|---|---|
| | | வழங்கப்பட்டுள்ளது. தற்போது கருத்திட்டத்தை ஆரம்பிக்க மேற்கொள்ளப்படும் ஆரம்ப பொறியியல் நடவடிக்கைகளுக்காக தேவைபடும் 04 அலுவலர்களை ஒப்பந்த அடிப்படையில் இதன் கீழ் ஆட்சேர்க்கப்பட்டுள்ளனர். எதிர்காலத்தில் கருத்திட்டம் இடம்பெறும் விதத்தில் பிரகாரம் எஞ்சிய 09 பேர்களையும் ஆட்சேர்க்க நடவடிக்கை எடுப்பதுடன், அதன் பிரகாரம் ஆளணி 153+13=166 ஆகும். | வெற்றிடங்களை மற்றும் மிகையற்றதாக பேணிச் செல்ல நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தின் இலக்கம் DMS/1523(Vol – 1) மற்றும் 2019 மே 22 திகதிய கடிதம் மூலம் அதிகார சபையின் அங்கீகார பதவிகளிற்குரிய ஆட்சேர்ப்பு திட்டம் பழைய படிவத்திற்கு அமைய தயாரித்த ஒன்றாகையால் அதனை புதிய படிவத்திற்கமைய நாளாதுவரையாக்கி அங்கீகாரத்திற்கு சமர்பிக்குமாறு அறிவித்துள்ள போதும், 2022 ஏப்ரல் அளவிலும் உரிய வகையில் அங்கீகார ஆட்சேர்ப்பு திட்டமொன்று அதிகார சபைக்கு இருக்கவில்லை. | 2016 படிவத்தின் பிரகாரம், நாளாதுவரையாக்கப்பட்ட ஆட்சேர்ப்பு திட்டத்தை முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திற்கு எம்மால் 2018 ஆண்டிலிருந்து சமர்பித்ததுடன், இறுதயாக கோவை இலக்கம் USDA/ADM/03/71 – 2021 இன்கீழ் 2022.03.15 திகதியும் மேலும் திருத்தி வரிசை அமைச்சினூடாக அங்கீகாரத்திற்கு சமர்பித்துள்ள போதும் இதுவரை அங்கீகாரம் கிடைக்கவில்லை. | குறித்த பதவிகளை அங்கீகார ஆளணிக்கு முறையாக உட்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (இ) | இறுதியாக அங்கீகரித்துள்ள ஆட்சேர்ப்பு திட்டம் பிரகாரம் சமூக அபிவிருத்தி உதவியாளர் பதவிக்கு விண்ணப்பிக்கையில் பூர்த்தி செய்ய வேண்டிய தகைமையான தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனத்தினால் வழங்கப்படும் தொழில் ரீதியான சமூகப் பணிகள் தொடர்பாக முழுநேர 2 வருட டிப்ளோமா பாடநெறியை சித்தியடைந்தருக்க வேண்டிய போதும் மீளாய்வாண்டினுள் அதிகார சபைக்கு ஆட்சேர்த்த 12 சமூக அபிவிருத்தி உதவியாளர்கள் விண்ணப்ப படிவத்தை சமரப்பிக்கும் போதும் அவ்வடிப்படை தகைமையை பூர்த்தி செய்திருக்காததுடன் ஆட்சேர்ப்பு திட்டத்தில் ஏற்பாடுகளுக்கு மாற்றமாக எதிர்காலத்தில் அவ்வடிப்படை தகைமையை பூர்த்தி செய்யும் | 12 பதவிகளுக்கும் விண்ணப்பித்த விண்ணப்பதாரர்களிடையில் சமூகப் பணிகள் தொடர்பான டிப்ளோமாதாரர்கள் 03 பேர்களில் இருவர் மாத்திரம் நேர்முகப் பரீடசைக்கு சமூகமளித்ததுடன், அவர்கள் வழங்கப்படும் சம்பளம் தொடர்பாக திருப்தியடையாது அப் பதவிவளை ஏற்க மருத்தனர். அதன் பிரகாரம், அத்தகைமை தவிர ஏனைய அனைத்து தகைமைகளையும் பூர்த்தி செய்யும் நேர்முகப் பரீட்சையில் அதிக புள்ளிகள் பெற்ற 10 பேர்கள் சமூக பணிகள் தொடர்பான | அங்கீகார ஆட்சேர்ப்பு திட்டத்திற்கு அமைய நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | |
|---|---|---|
| இணக்கப்பாட்டின் மீது அவர்கள் அப்பதவிகளிற்கு ஆட்சேர்க்கப்பட்டிருந்தனர். | டிப்ளோமாவை 02 வருடங்களிற்குள் பூர்த்தி செய்து தரும் இணக்கப்பாட்டுடன் நியமனம் வழங்க பணிப்பாளர் சபை தீர்மானித்தது. எவ்வாறாயினும் 2016 படிவத்தின் பிரகாரம் தயாரிக்கப்பட்ட திருத்திய ஆட்சேர்ப்பு திட்டத்திலிருந்து இப்பதவிக்காக சமூக பணிகள் தொடர்பான டிப்ளோமாவின் தேவைப்பாட்டை அகற்றியுள்ளதுடன், அத் திட்டத்தை முகாத்துவ சேவைகள் திணைக்களத்தால் கலந்துரையாடல் மட்டத்தில் அங்கீகரித்துள்ள போதும் இதுவரை எழுத்துமூல அங்கீகாரம் எமக்கு அனுப்பப்படவில்லை. | |

## 4. கணக்களிபொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 கூட்டிணைந்த திட்டம்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| அதிகார சபையின் நோக்கத்தை அமைந்து கொள்ள 2008 இன் 36 இலக்க நகர குடியிருப்பு அதிகார சட்டத்திற்கு இணங்க நிரைவேற்ற வேண்டிய பின்வரும் விடயங்கள் கூட்டிணைந்த திட்டத்தில் உட்படுத்தப்பட்டு இருக்கவில்லை. | | |
| (அ) நகர குடியிருப்பாளர்களின் பொருளாதார மற்றும் சமூக நிலையை கண்டறிவது தொடர்பான கணிப்பீடு மற்றும் கற்கை நடவடிக்கைகளை நடாத்துதல். | எமது நிறுவனத்தின் சமூக விழிப்பூட்டல் பிரிவினால் மேற்கொள்ளும் கருத்திட்டங்களின் தகவல்கள் கூட்டிணைந்த திட்டத்திற்கு உட்படுத்தி கூட்டிணைந்த திட்டத்தை நாளாதுவரையாக்க நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | அதிகார சபையின் நோக்கங்களை அடைந்து கொள்ளக் கூடியவாறு செயற்பாடுகளை உள்ளடக்கி கூட்டிணைந்த திட்டத்தை தயாரிக்க வேண்டும். |
| (ஆ) தேசிய ரீதியாக தொடர்புபடும் நகர வீடமைப்பு கடன் உத்தேச திட்டததை அமுல்படுத்துதல். | நகர வீட்டுத் தொகுதிக்கு தரமான வீடுகளை சேர்க்கும் நோக்கில் ‘‘வீடமைப்புக் கடன் வேலைத் திட்டத்தை அமுல்படுத்த தேசிய கொள்கை திட்டமிடல் | அதிகார சபையின் நோக்கங்களை அடைந்து கொள்ளக் கூடியவாறு செயற்பாடுகளை உள்ளடக்கி |

| | | |
|---|---|---|
| | திணைக்களத்திடமிருந்து திறைசேரி ஏற்பாடுகளிற்கு பதிலாக தேசிய வங்கிகளினூடாக இவ் வேலைத் திட்டத்தை அமுல்படுத்துமாறு பரிந்துரை வழங்கப்பட்டுள்ளது. அது தொடர்பாக தகவல்களை கூட்டிணைந்த திட்டத்திற்கு உட்படுத்தி கூடடிணைந்த திட்டத்தை நாளாதுவரையாக்க நடவடிக்கை எடுக்கப்படும். | கூட்டிணைந்த திட்டத்தை தயாரிக்க வேண்டும். |

**4.2 செயல்நடவடிக்கைத் திட்டம்**

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2008 இன் 36 ஆம் இலக்க நகர குடியிருப்பு அபிவிருத்தி அதிகார சட்டத்தின பிரகாரம் குறைந்த வருமானமுடைய மக்களின் பௌதீக, சமூக மற்றும் பொருளாதார நிலைமைகளை மேம்படுத்தும் நோக்கில் 07 பௌதீக அபிவிருத்தி கருத்திட்டங்களை செயல்நடவடிக்கை திட்ட பிரகாரம் 2021 ஆண்டில் நடாத்தப்பட வேண்டிய போதிலும் முனாவ வீடமைப்பு கருத்திட்டத்தை பூர்த்தி செய்யும் மட்ட நடவடிக்கைகளுக்கு மேலதிகமாக மீளாய்வாண்டில் எவ்வித பௌதீக அபிவிருத்தி நடவடிக்கையையும் மேற்கொண்டிருக்கவில்லை. அவ்வாறே, அதிகார சபையினால் மீளாய்வாண்டிற்காக தயாரித்திருந்த செயல்நடவடிக்கை திட்டத்தில் உள்ளடங்கிய மதிப்பீட்டு கிரயம் ரூபா 6,619.56 மில்லியனான நடுத்தர வருமானதாரர்களுக்கான வீடமைப்பு கருத்திட்டத்தின் நிர்மாண பணிகள் மீளாய்வாண்டினுள் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. | குறைந்த வருமானமுடைய மக்களின் பௌதீக, சமூக மற்றும் பொருளாதார நிலைமைகளை மேம்படுத்தும் நோக்கில் பொது திறைசேரி ஏற்பாட்டின் மீது முனாவ வீடமைப்பு கருத்திட்ட வேலைகள் பூர்த்தி செய்யப்படடன. அவ்வாறே 2021 ஆண்டு உள்ளக வருமானங்களால் பூர்த்த செய்ய திட்டமிட்டிருந்த பௌதீக அபிவிருத்தி கருத்திட்டங்களை ஆரம்பிக்க தேவையான அடிப்படை கருத்துரீதியான திட்டத்திற்காக அங்கீகாரத்தை பெற்றுக் கொள்ள அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டது. ரூபா 6,619.56 ஆன நிதி மதிப்பீட்டுடன் கூடிய நடுத்தர வருமானதாரர்களுக்கான கருத்திட்டத்தின் ஆரம்ப பணிகள் 2021 ஆண்டினுள் மேற்கொள்ள முடியுமானது. | செயல்நடவடிக்கை திட்டத்தை ஆக்கபூர்வமாக தயாரித்து குறித்த நடவடிக்கைகளை திட்டத்தின் பிரகாரம் மேற்கொள்ள முயற்சிக்க வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டில் திறைசேரி மானியத்தின் மீது மேற்கொள்ள வேண்டிய செயற்பாடுகளை மாத்திரம் செயல்நடவடிக்கை திட்டத்தில் உள்ளடக்கியிருந்ததுடன் அதிகார சபையின் வருமானத்தின் மீது மேற்கொள்ளும் செயற்பாடுகளை செயல்நடவடிக்கை திட்டத்தில் | 2021 ஆண்டினுள் செயற்படுத்த திட்டமிட்ட ஏனைய பௌதீக கருத்திட்டங்களில் சிங்ஹபுர மற்றும் சஹஸ்புர வீடமைப்பு கருத்திட்டங்களில் பழுதுபார்க்கும் நடவடிக்கைகளை அதிகார | பதிலாக சமர்பித்துள்ள கருத்திட்டங்களின் பழுதுபார்தல்கள் மற்றும் நிர்மாணங்களும் திறைசேரி மானியம் மீது மேற்கொள்ள வேண்டிய |

| | | | |
|---|---|---|---|
| | உள்ளடக்கியிருக்கவில்லை. | சபையின் உள்ளக வருமானத்தின் மூலம் மேற்கொள்ள திட்டமிடப்பட்டது. மேலும் ழுனாவ மற்றும் நாவலபிடிய வீடமைப்பு கருத்திட்டத்தில் உள்ளக வருமானத்தின் மூலம் மேற்கொள்ளப்பட்டதுடன் இச் செயற்பாடுகள் 2021 வருடாந்த செயல்நடவடிக்கை திட்டத்திற்கு உட்படுத்தப்பட்டன. | செயற்பாடுகளாவதுடன் அதிகார சபையின் வருமானத்தின் மீது மேற்கொள்ளும் செயற்பாடுகளும் செயல்நடவடிக்கை திட்டத்திற்கு உள்ளடக்க வேண்டும். |
| (இ) | அரச நிதி சுற்றறிக்கை இலக்கம் 01/2014 பிரகாரம் பின்வரும் விடயங்களை உள்ளடக்கி அதிகார சபையினால் செயல்நடவடிக்கை திட்டத்தை தயாரித்திருக்கவில்லை. | | |
| (i) | உத்தேச பிரதான முதலீடுகள், கொள்ளலவு விரிவாக்கல், பிரதான பெறுகைகள் உள்ளிட்ட வருடாந்த பெறுகைகள் திட்டம் | உத்தேச பிரதான முதலீடுகள், கொள்ளலவு விரிவாக்கலை எதிர்காலத்தில் வருடாந்த செயல்நடவடிக்கை திட்டத்திற்கு உள்ளடக்க நடவடிக்கை எடுக்கப்படும். | ஆண்டினுள் மேற்கொள்ள உத்தேசித்துள்ள அனைத்து செயற்பாடுகளையும் செயல்நடவடிக்கை திட்டத்திற்கு உள்ளடக்க வேண்டும். |
| (ii) | மனிதவள அபிவிருத்தி திட்டம் | எதிர்காலத்தில் வருடாந்த செயல்நடவடிக்கை திட்டத்திற்கு மனிதவள அபிவிருத்தி திட்டத்தை உள்ளடக்க நடவடிக்கை எடுக்கப்படும். | ஆண்டினுள் மேற்கொள்ள உத்தேசித்துள்ள அனைத்து செயற்பாடுகளையும் செயல்நடவடிக்கை திட்டத்திற்கு உள்ளடக்க வேண்டும். |

**4.3 உள்ளக கணக்காய்வு**

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | அங்கீகார ஆளணியினுள் கணக்காய்வு பிரிவிற்காக உள்ளக கணக்காய்வாளர் பதவி மாத்திரம் அங்கீகரிக்கப்பட்டு இருந்ததுடன் அது இடைநிலை முகாமைத்துவ மட்ட (MM) பதவியாக தொடர்ந்தும் பேணிச் செல்லப்பட்டிருந்தது. அவ்வாறே இப்பிரிவிற்கு கணக்காய்வு உத்தியோகத்தர்களை ஆட்சேர்க்காது | அதிகார சபையின் உள்ளக கணக்காய்வு பதவியொன்றை (HM-1-1) உருவாக்க பணிப்பாளர் சபையினால் அங்கீகாரம் வழங்கப்பட்டது. அவ் அங்கீகாரத்திற்கு அமைய வரிசை அமைச்சினூடாக குறித்த கோரிக்கையை | அதிகார சபையின் உள்ளக கட்டுப்பாட்டின் ஒரு பிரிவாக உள்ளக கணக்காய்வை வலுவூட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | இரண்டு முகாமைத்துவ உதவியாளர் அலுவலர்கள் மாத்திரம் இணைக்கப்பட்டிருந்தனர். | முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது. | |
| (ஆ) | மீளாய்வாண்டிற்காக அங்கீகாரிக்கப்பட்ட கணக்காய்வு திட்டத்தில் உள்ளடங்கிய 14 வேலைத் திட்டங்களில் 03 வேலைத் திட்டங்களிற்கு உரிய செயற்பாடுகள் மாத்திரம் மேற்கொள்ளப்பட்டிருந்தன. | எதிர்வரும் ஆண்டிற்கான கணக்காய்வு திட்டத்தில் உள்ளடங்கிய வேலைத் திட்டங்களிற்குரிய செயற்பாடுகளை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கிறேன். | கணக்காய்வுத் திட்டத்தின் பிரகாரம் உரிய செயற்பாடுகளை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**4.4 பாதீட்டுக் கட்டுப்பாடு**

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | நிறுவனத்தால் ஆக்கபூர்வ கட்டுபாட்டு உபாயமொன்றாக பாதீட்டை பயன்படுத்தி இருக்காததுடன் பாதிடப்பட்ட செலவுகளை உள்ளவாறான செலவுகளுடன் ஒப்பிடுபையில் 1 சதவீதம் முதல் 1567 சதவீதம் வரையான கவனிக்கத்தக்க முரன்பாடொன்று அவதானிக்கப்பட்டதால் பாதீடு ஆக்கபூர்வ முகாமைத்துவ கட்டுபாட்டுச் சாதனமொன்றாக பயன்படுத்தப்படவில்லை என அவதானிக்கப்பட்டது. | பாதீட்டை ஆக்கபூர்வமான முகாமைத்துவ கட்டுப்பாட்டு அலகொன்றாக பயன்படுத்த கவனம் செலுத்தப்பட்டுள்ளது. எனினும் சந்தர்ப்பத்திற்கு ஏற்ப அங்கீகரிக்கப்படும் சில முக்கிய செலவுகள் காரணமாக வருட இறுதியிளவில் சில செலவுகளிற்கான செலவின விடயங்களில் மாத்திரம் வித்தியாசம் காணப்பட்டன. | முறையான பாதீட்டுக் கட்டுப்பாட்டுடன் உரிய செயற்பாடுகளை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டில் நிலையான சொத்துக்களை கொள்வனவு செய்ய பாதீட்டு ஏற்பாட்டில் ரூபா 3.41 மில்லியன் ஒதுக்கியிருந்த போதும் ஆண்டிறுதியில் ரூபா 7.1 மில்லியனான நிலையான சொத்துக்களை கொள்வனவு செய்த காரணத்தால் பாதீட்டு ஏற்பாடுகளை விஞ்சி உள்ளவாறான செலவுகள் ரூபா 3.69 மிலலியனால் அதிகரித்திருந்தன. | சந்தர்ப்பத்திற்கு ஏற்ப தேவையான கொள்வனவு காரணமாக ஒதுக்கிய ஏற்பாடு போதாததுடன், அவ்வாறான மேலதிகமாக தேவையான நிதியை அதிகார சபையின் உள்ளக நிதியத்திலிருந்து தலைவரின் விஷேட அங்கீகாரத்துடன் மாத்திரம் கொள்வனவு செய்யப்பட்டுள்ளது. | முறையான பாதீட்டுக் கட்டுப்பாட்டுடன் உரிய செயற்பாடுகளை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**4.5 ஆண்டறிக்கையை பாராளுமன்றத்திற்கு சமர்பித்தல்**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2003 ஜுன் 02 இன் பீஈடீ/12 இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 6.5.3 பந்தி பிரகாரம் நிறுவனத்தினால் தனது ஆண்டறிக்கையை, கணக்காண்டு முடிவடைந்து 150 நாட்களுக்குள் பாராளுமன்றத்திற்கு சமர்பிக்க வேண்டிய போதும் | 2016 ஆண்டு முதல் 2020 ஆண்டு வரையான ஆண்டறிக்கைகளை 2021 நவம்பர் மாதம் 24 ஆம் திகதி நடாத்தப்பட்ட அமைச்சுசார் செயற்குழுக் கூட்டத்தில் | ஆண்டறிக்கையை தாமதமின்றி பாராளுமன்றத்திற்கு சமர்பிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |

அதிகார சபையினால் 2016 ஆண்டு முதல் 2020 ஆண்டு வரை ஆண்டறிக்கைகளை, 2022 மே அளவிலும் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பித்திருக்கவில்லை.

கலந்துரையாடியதுடன், அவ்வறிக்கைகளை 2021 நவம்பர் மாதம் 30 ஆம் திகதி பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது. 2021 ஆண்டிற்காக ஆண்டறிக்கை தற்போது வரையப்பட்டு பூர்த்தி செய்யப்பட்டுள்ளதுடன் அவ்வாண்டிற்காக இறுதி கணக்காய்வறிக்கை கிடைத்தவுடனே முன்நடவடிக்கை மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளது.